க. பொ.த உயர்தரம்
# கணக்கீடு 1

Channel NIE

கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சைக்கான முன்னோடி வினாப்பத்திரம் - 2022

கணக்கியல் 1 நேரம்:- இரண்டு மணித்தியாலம்

அறிவுறுத்தல்

பரீட்சை சுட்டென்.....................................

- **இல 1 முதல் - 30 வரையான வினாகக்ளுக்கான சரியான விடையினை தெரிவு செய்து அதன் இலக்கத்தினை வினாவிற்கு எதிரே உள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**
- **31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்குரிய சுருக்கமான விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
- **ஒவ்வொரு வினாவிற்கும் சமமான புள்ளி உரித்தாகும்.**

1) ஒரு நிறுவனத்தின் கணக்கீட்டின் பிரதான நோக்கத்தை மிகத் தெளிவாக விவரிக்கும் கூற்றாக அமைவது.
   1 நிதிக்கூற்றுக்களை ஒழுங்குபடுத்துவதற்காக கொடுக்கல் வாங்கல்களை அறிக்கைப்படுத்துதல்
   2 முகாமையாளர்களின் பாவனைக்காக தகவல்களை வழங்குதல்
   3 ஈடுபாடுடைய தரப்பினர்களுக்கு தீர்மானம் எடுப்பதற்காக தகவல்களை வழங்குதல்
   4 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல்.
   5 கணக்கீட்டு நியமங்களின்படி நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல். (.......)

- **கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி 2,3,4ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

குங்குமம் என்பவர் 2021.01.01 அன்று மொத்த விற்பனை நிலையம் ஒன்றை ஆரம்பித்தார். இந்த நிறுவனமானது கிரயத்தில் 25% இலாபம் வைத்து பொருட்களை விற்பனை செய்வதோடு, இது VAT ற்காக பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனமொன்றாகும். (VAT 8 வீதமாகும் **கொள்வனவின் போது** VAT **அறவிடப்படமாட்டாது** )

| | கொடுக்கல் வாங்கல் | பெறுமதி ( ரூ 000) |
|---|---|---|
| 1 | குங்குமம் வியாபாரத்திற்கு மூலதனமாக ஈடுபடுத்திய தொகை | -600 |
| 2 | கடனுக்கு இருப்பு கொள்வனவு | 264 |
| 3 | கடனுக்கு இருப்பு விற்பனை | 324 |
| 4 | கடனுக்கு கொள்வனவு செய்த இருப்பில் ஒருபகுதி குறைபாடு காரணமாக திருப்பியனுப்பப்பட்டது. | 108 |
| 5 | ஊழியர் சம்பள கொடுப்பனவு | 100 |

2) மேலே உள்ள கொடுக்கல் வாங்கல் இலக்கம் 1,3,4 இன் தேறிய விளைவை குறிக்கும் கணக்கீட்டுச் சமன்பாடு யாது?

| | சொத்து (ரூ 000) = | உரிமை (ரூ 000) | + பொறுப்பு (ரூ 000) |
|---|---|---|---|
| 1. | 576 | 660 | (84) |
| 2. | +584 | 668 | (84) |
| 3. | 584 | 660 | (84) |
| 4. | 824 | +660 | +24 |
| 5. | 824 | +668 | (108) |

(.......)

3) மேலே கொடுக்கல் வாங்கல் இலக்கம் 1,2,4 ஆகியவற்றைப் பதிவு செய்ய பயன்படுத்தும் மூல ஆவணங்கள்

1 பொது நாட்குறிப்பு கைச்சாத்து, விலைப்பட்டியல், பற்றுச்சீட்டு
2 பொது நாட்குறிப்பு கைச்சாத்து, விலைப்பட்டியல், செலவுத்தாள்
3 பற்றுச் சீட்டு, விலைப்பட்டியல், பற்றுச்சீட்டு
4 பற்றுச் சீட்டு, விலைப்பட்டியல், செலவுத்தாள்
5 கைச்சாத்து, விலைப்பட்டியல், பற்றுச்சீட்டு (……..)

4) இந் நிறுவனமானது கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கொன்றை பராமரிக்குமாயின் மேலே உள்ள கொடுக்கல் வாங்கல் இல 3 இனை பதிவு செய்வதற்கு பொருத்தமான இரட்டைப் பதிவு

| | வரவு (000ரூ) | செலவு (000ரூ) |
|---|---|---|
| 1. கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 324 | |
| விற்பனைக் கணக்கு | | 324 |
| 2. கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 324 | |
| விற்பனைக் கணக்கு | | 300 |
| VAT வரி கணக்கு | | 24 |
| 3. கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 300 | |
| VAT செலவு கணக்கு | 24 | |
| விற்பனைக் கணக்கு | | 324 |
| 4. கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 300 | |
| விற்பனைக் கணக்கு | | 300 |
| 5. கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 300 | |
| VAT செலவு | 24 | |
| விற்பனைக் கணக்கு | | 300 |
| VAT கட்டுப்பாட்டுக் கணக்கு | | 24 |

(……..)

5) 2021.01.01இல் ரூ 800 000 இனை முதலீடு செய்து சிதும் என்பவர் எழுது பொருள் விற்பனை வணிகம் ஒன்றினை ஆரம்பித்ததுடன் 2021 ஜனவரி மாதம் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றுள்ளன.

- 2021.01.01 சனுக வியாபாரிகளிடமிருந்து ரூ 80 000 பெறுமதியான எழுது பொருட்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டன.
- 2021.01.11 ரூ 40 000 கிரயமான எழுது பொருட்கள் ரூபா 80 000 இற்கு சுமதிக்கு கடனுக்கு விற்கப்பட்டன.
- 2021.01.18 அதில் விற்பனை விலை ரூ 40 000 கொண்ட எழுது பொருட்கள் சுமதியால் திருப்பியனுப்பப்பட்டன.
- 2021.01.25 ரூ 5000 கழிவு பெற்ற பின் சனுகா வியாபாரத்திற்கு செலுத்தவேண்டிய தொகை செலுத்தப்பட்டது.

சிதும் வியாபாரத்தில் 2021.01.11 முதல் 2021.01.25 வரை இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்ய பயன்படுத்திய மூல ஏடுகள் வரிசையில்

1 கொள்வனவு நாளேடு, விற்பனை நாளேடு, வெளித்திரும்பல் நாளேடு
2 விற்பனை நாளேடு, வெளித்திரும்பல் நாளேடு, காசு கொடுப்பனவு நாளேடு
3 விற்பனை நாளேடு, உட்திரும்பல் நாளேடு, காசு பெறுவனவு நாளேடு
4 விற்பனை நாளேடு, உட்திரும்பல் நாளேடு, காசு கொடுப்பனவு நாளேடு
5 கொள்வனவு நாளேடு, வெளித்திரும்பல் நாளேடு , காசு கொடுப்பனவு நாளேடு

(……….)

6) ரூபா 4000 ஆக இருந்த சில்லரை முற்பணம் ஏப்ரல் மாதம் முதல் 2000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது 2021 மார்ச் மாத ஆரம்பத்தில் சில்லரை காசாளரிடம் ரூபா 1600 மீதியாக இருந்தது.மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் சில்லரை மொத்தச் செலவு ரூபா 6000 ஆகும். மார்ச் மாத்தினை விட ஏப்ரல் மாதத்தின் சில்லறைச் செலவு 50 வீதத்தால் அதிகரித்துள்ளது. ஏப்ரல் மாத்தில் மீள்நிரப்ப வேண்டிய தொகை.

1 ரூ 1600 ஆகும்.
2 ரூ 2400 ஆகும்.
3 ரூ 6000 ஆகும்.
4 ரூ 4000 ஆகும்.
5 ரூ 3600 ஆகும். (…….)

7) 31.03.2022 இல் வரையறுக்கப்பட்ட மது பொதுக் கம்பனியின் வங்கிக் கூற்று மீதி ரூ 25000 வங்கி மேலதிக பற்றாகும். ஆனால் அது காசு கட்டுப்பாட்டு மீதியுடன் உடன்படவில்லை. வேறுபாட்டிற்கான காரணங்கள் பின்வருமாறு

- மார்ச் மாதம் கொடுப்பனவுகளுக்காக வழங்கிய காசோலைகளின் பெறுமதி ரூ 165 000 ஆவதுடன் அவற்றுள் ரூ 7500 பெப்ரவரி மாதம் வழங்கி சமர்ப்பிகக் ப்படாதவைகளாகும்.
- மார்ச் மாதம் வழங்கிய மொத்த காசோலைகளின் பெறுமதி ரூ 175 000 ஆகும்.
- மார்ச் மாதம் வைப்பிலிட்ட காசோலைகளின் பெறுமதி ரூ 225 000 ஆகும். ஆனால் அவற்றில் மறுக்கப்பபட்ட் காசோலைகளின் பெறுமதி ரூ 53 000 ஆகும்.
- மார்ச் மாதம் நிலையான கடட்ளைகளின் மொத்த பெறுமதி ரூ 65 000 ஆகும்.

2022.03.31 சீராக்குவதற்கு முனனும் பின்னுமான காசு மீதி யாது?

| | சீராக்குவதற்கு முன் | சீராக்கிய பின் |
|---|---|---|
| 1. | 33 000 | 18 000 |
| 2. | 75 500 | 10 500 |
| 3. | 33 000 | 10 500 |
| 4. | 25 500 | 60 500 |
| 5. | (75 500) | 60 500 |

(……)

8) 31.03.2022 இல் முடிவடைந்த வருடத்திற்கான பணமாக பெறப்பட்ட முதலீட்டு வருமானம் ரூ 6500 ஆனது முதலீட்டு வருமானக் கணக்கில் ரூபா 5600 என வரவு வைக்கப்பட்டுள்ளது. இந்த வலுவை திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவு

| | | |
|---|---|---|
| 1. முதலீட்டு வருமானக் கணக்கு வரவு | 900 | |
| தொங்கல் கணக்கு செலவு | | 900 |
| 2. காசு கணக்கு வரவு | 900 | |
| முதலீட்டு வருமானக் கணக்கு செலவு | | 900 |
| 3. தொங்கல் கணக்கு வரவு | 13000 | |
| முதலீட்டு வருமானக் கணக்கு செலவு | | 13000 |
| 4. தொங்கல் கணக்கு வரவு | 12100 | |
| முதலீட்டு வருமானக் கணக்கு செலவு | | 12100 |
| 5. தொங்கல் கணக்கு வரவு | 900 | |
| முதலீட்டு வருமானக் கணக்கு செலவு | | 900 |

(……)

9) 31.03.2022 அன்று முடிவடையும் ஆண்டிற்கான கடன் கொடுனர் துணை பேரேட்டிலிருந்து பெறப்பட்ட பின்வரும் தகவல்கள் உமக்கு வழங்கப்பட்டுள்ளன.

| வழங்குனர் பெயர் | 2021.04.01 இல் மீதி | கடன் பெறுவனவு | அபராத வட்டி | காசு கொடுப்பனவு | 2022.03.31 இல் மீதி |
|---|---|---|---|---|---|
| A | 500 | 1200 | 200 | 400 | 1500 |
| B | 100 | 800 | - | 300 | 600 |
| C | 150 | 500 | 50 | 300 | 400 |
| | 750 | 2500 | 250 | 1000 | 2500 |

2022.03.31 இல் கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டு மீதியோடு இம்மீதி இணங்கவில்லை. பின்வரும் வழுக்கள் அடையாளம் காணப்பட்டன.

- கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூ 5200 என பதியப்பட்டுள்ளது.
- C இன் அபராத வட்டி கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் தவறான பக்கத்தில் பதியப்பட்டுள்ளது.
- B ற்கான காசு கொடுப்பனவு **உரிய புத்தகத்தில்** பதியப்படாததோடு B இன் கணக்கில் சரியாக பதியப்பட்டுள்ளது.

கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கை திருத்த முன்னும் பின்னருமான மீதிகள்

| | **திருத்த முன் (ரூ)** | **திருத்திய பின் (ரூ)** |
|---|---|---|
| 1. | 2500 செலவு | 2500 செலவு |
| 2. | 400 வரவு | 5400 செலவு |
| 3. | 2500 செலவு | 5400 செலவு |
| 4. | 5400 செலவு | 2500 செலவு |
| 5. | 400 செலவு | 2500 செலவு |

(…….)

10) குத்தகைக்கு விடப்பட்ட சொத்து மற்றும் உடன்படிக்கைகள் மீது எழும் விதிகள் மற்றும் பொறுப்புகளின் நிதிநிலை அறிக்கைகளில் உள்ள அங்கீகாரம் தொடர்பான கருத்து,

| **குத்தகை** | **வழங்கல் பொறுப்புக்கள்** |
|---|---|
| 1. யதார்த்தமான | பாதுகாப்புகள் |
| 2. வரலாற்று செலவு | பாதுகாப்பு |
| 3. யதார்த்தமானது | யதார்த்தமானது |
| 4. வரலாற்று செலவு | யதார்த்தமானது |
| 5. பாதுகாப்பு எண்ணக்கரு | யதார்த்தமானது |

(…….)

- **11 மற்றும் 12ஆம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களை பயன்படுத்தவும்.**

வரையறுக்கப்பட்ட ருசினி பொது கம்பனியின் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன

- 2019 10 01 அன்று நிறுவனம் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டதோடு அதன் வருடாந்த காப்புறுதி தவணை கட்டணம் ரூபா 240 000 ஆகும். இக் கட்டணமானது ஒப்பந்தம் ஆரம்பிக்கும் குறித்த தினத்திலேயே செலுத்தப்பட வேண்டும். நாட்டில் தோன்றிய பணவீக்கம் காரணமாக 2021.10.01ஆம் திகதி முதல் காப்புறுதி வருடாந்த தவணைக் கட்டணம் ரூபா 360 000 ஆக அதிகரிக்கப்பட்டது. வணிக கட்டிடத்தில் ஒரு பகுதி வாடகைக்கு விடப்பட்டு. 10 மாதங்களுக்கான வாடகை காசாக கிடைக்கப் பெற்றதுடன். 2022.03.31இல் வருட முடிவில் இரண்டு மாதங்களுக்கான வாடகை ரூபாய் 120 000 காசாக பெறப்படவில்லை.

11) 2022.03.31 திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான இனம்காணப்பட வேண்டிய கட்டிட வாடகை வருமானம் மற்றும் காப்புறுதி செலவு ஆகியன

| கட்டிட வாடகை வருமானம் | காப்புறுதி செலவு |
|---|---|
| 1. 720 000 | 420 000 |
| 2. 720 000 | 300 000 |
| 3. 420 000 | 300 000 |
| 4. 600 000 | 360 000 |
| 5. 420 000 | 480 000 |

(…….)

12) இந்நிறுவனத்தின் காப்புறுதி செலவு மற்றும் கட்டிட வாடகை வருமான சீராக்கம் காரணமாக காசில் ஏற்பட்ட தேறிய விளைவும் உரிமையில் ஏற்பட்ட தேறிய விளைவும்

| | காசு (ரூ 000) | உரிமை (ரூ 000) |
|---|---|---|
| 1. | 420 ஆல் குறைவடைந்துள்ளது | 60 ஆல் குறைவடைந்துள்ளது |
| 2. | 60 ஆல் அதிகரித்துளள் து | 600 ஆல் அதிகரித்துள்ளது |
| 3. | 60ஆல் குறைவடைந்துள்ளது | 420 ஆல் அதிகரித்துள்ளது |
| 4. | 420 ஆல் அதிரித்துள்ளது | 240 ஆல் அதிகரித்துள்ளது. |
| 5. | 180 ஆல் அதிகரித்துள்ளது | 60 ஆல் குறைவடைந்துள்ளது. |

(…….)

13) பின்வரும் கூற்றுக்களுள் சொத்தொன்றின் பண்புகளை உள்ளடக்கிய கூற்றாக அமைவது.

A- கடந்த கால கொடுக்கல் வாங்கல்களின் விளைவாகும்.

B- நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டது

C- எதிர்கால பொருளாதார அனுகூலங்களை வழங்குகின்றது.

D- நிகழ்கால பொருளாதார சொத்தாக இருக்க வேண்டும்.

1. மேலுள்ள அனைத்தும்
2. A,B,C மாத்திரம்
3. A,C,D மாத்திரம்
4. A யும் C யும் மாத்திரம்
5. A,B,D மாத்திரம்

(……..)

14) மகரகம அருனலு நலன்புரி நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பின்வருமாறு

| | 2022-03-31 | 2021-03-31 |
|---|---|---|
| கட்டுறு அங்கத்துவ கடட்ணம் | 10 | 30 |
| முற்பணமாக பெற்ற அங்கத்துவகடட்ணம் | 70 | 50 |
| நீண்டகால வங்கிக் கடன் | 700 | 850 |
| ஆதன பொறி உபகரணங்கள் | 900 | 1000 |
| காசும் காசுக்கு சமனானவையும் | 100 | 120 |

2022.03.31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான மிகை அல்லது குறை மற்றும் 2022.03.31 இன் திரண்ட நிதியாவது

| | மிகை (ரூ) | திரண்ட நிதி (ரூ) |
|---|---|---|
| 1. | 10 000 மிகை | 250 000 |
| 2. | 40 000 மிகை | 230 000 |
| 3. | 40 000 மிகை | 190 000 |
| 4. | 10 000 குறை | 240 000 |
| 5. | 40 000 குறை | 230 000 |

(…….)

15) 2022.03.31இல் முடிவுற்ற ஆண்டுக்கான உற்பத்தி நடவடிக்கை மற்றும் வர்த்தகம் மேற்கொள்ளும் வரையறுக்கப்பட்ட குமுது வணிகத்தின் பின்வரும் மீதிகள் உமக்கு தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| விற்பனை கிரயம் | ரூ 500 000 |
| நடைமுறை இருப்பு | ரூ 60 000 |
| முடிவு பொருள் இருப்பு | ரூ 100 000 |
| உற்பத்தி பொது மேந்தலை | ரூ 240 000 |

**முதன்மை கிரயம் மற்றும் உற்பத்தி மேந்தலை என்பன**

| | முதன்மை கிரயம் ரூ | உற்பத்தி கிரயம் ரூ |
|---|---|---|
| 1. | 200 000 | 500 000 |
| 2. | 300 000 | 600 000 |
| 3. | 300 000 | 500 000 |
| 4. | 360 000 | 400 000 |
| 5. | 400 000 | 400 000 |

(……….)

16) 2022.03.31 முடிவுற்ற ஆண்டுக்கான இருப்பு பதிவேட்டில் இருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டன முதல் உள், முதல் வெளி முறையில் பதிவுகள் இடம்பெற்றுள்ளன.

| திகதி | விபரம் | அலகுக் கிரயம் | பெறுமதி (ரூ) |
|---|---|---|---|
| 22-03-01 | மீதி | 100 | 10000 |
| 22-03-10 | பெறுவனவு | 150 | 30000 |
| 22-03-25 | வழங்கல் | 250 | 25000 |
| 22-03-31 | பெறுவனவு | 160 | 32000 |
| 22-03-31 | வழங்கல் | 250 | 75000 |

2022.03.31 இல் இருப்பின் கிரயம் மற்றும் மொத்த இலாபம்

| | மிகுதி இருப்பின் கிரயம் | மொத்த இலாபம் |
|---|---|---|
| 1. | 16000 | 56000 |
| 2. | 25000 | 44000 |
| 3. | 16000 | 44000 |
| 4. | 25600 | 56000 |
| 5. | 16000 | 25000 |

(……..…)

17) 31-03-2022 மற்றும் 31-03-2021 அன்று நிதிநிலமை கூற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட சில மீதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | **2022-03-31 (ரூ. 000)** | **2021-03-31 (ரூ. 000)** |
|---|---|---|
| வங்கிக் கடன் | 1000 | 700 |
| ஆதன பொறி உபகரணங்கள் | 1500 | 1200 |

**மேலதிக தகவல்கள்**

- 31-03-2022 முடிவடையும் ஆண்டில் வங்கிக் கடன் மீள் கொடுப்பனவு ரூ.150 000ஆவதுடன் வங்கிக் கடனும் பெறப்பட்டது.
- 250 000 ரூபாய் கிரயமான ஒரு உபகரணமானது 50 000 ரூபாய் இலாபத்தில் விற்கப்பட்டது. உபகரணங்களை விற்பனை செய்ததன் மூலம் 200 000 ரூபா காசாக பெறப்பட்டுள்ளதுடன் , ஆதன சொத்து உபகரணங்கள் 500 000 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட்டன.

31-03-2022 அன்று முடிவுற்ற ஆண்டில் பெற்றுக்கொண்ட வங்கிக் கடன்கள் மற்றும் கடனின் வருடாந்த குறைவு

| | வங்கி கடன் ரூ | வருடாந்த குறைவின் பெறுமதி ரூ |
|---|---|---|
| 1. | 300 000 | 10 000 |
| 2. | 450 000 | 10 000 |
| 3. | 450 000 | 50 000 |
| 4. | 300 000 | 50 000 |
| 5. | 450 000 | 15 000 |

(……)

18) 31.03.2022 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வணிகத்தின் இரண்டு இயந்திரங்கள் தொடர்பான தகவல்கள் வருமாறு

1 2021.04.01 அன்று இயந்திர கணக்கின் மீதி ரூ1500 000 ஆகும். திரண்ட தேய்வு கணக்கு மீதி ரூ 520 000 ஆகும்.

2 2019.04.01 இல் கொள்வனவு செய்த ரூ 850 000 பெறுமதியான இயந்திரம், 2021.04.01 இல் மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வின்படி அதற்கான ஆயட்காலம் ஐந்து வருடத்திலிருந்து எட்டு வருடமாக அதிகரித்துள்ளது.

3 2021.04.01 இல் மற்றைய இயந்திரத்தின் பயன்தரு ஆயட்காலம் 10 வருடங்களாகவும் அதன் எச்சப் பெறுமதி ரூ 50 000 ஆகவும் இருந்ததோடு மறுமதிப்பாய்வின் போது அதில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

2022.03.31 முடிவுற்ற ஆண்டில் மதிப்பாய்வு செய்யப்பட்ட இயந்திரத்தின் வருடாந்த பெறுமான தேய்வு மற்றும் 2022.03.31 ஆம் திகதி படி இயந்திர தேய்மான ஒதுக்கு கணக்கின் மீதி

| | வருடாந்த தேய்வு தொகை ரூ | 22-03-31 இல் இயந்திர தேய்வு ஒதுக்கு கணக்கு மீதி |
|---|---|---|
| 1. | 60 000 | 580 000 |
| 2. | 85 000 | 665 000 |
| 3. | 145 000 | 665 000 |
| 4. | 60 000 | 665 000 |
| 5. | 85 000 | 605 000 |
| 6. | | |

(…….)

19) 2022.03.31 முடிவடைந்த வருடத்திற்கான சித்த கந்துரட பொதுக் கம்பனியில் இருந்து எடுக்கப்பட்ட நிதி கூற்று 2022.09.05 இயக்குனர் சபையில் கையொப்பமிட்டு வெளியிடப்பட்டது. இக்காலப்பகுதியில் நிறுவனம் தொடர்பில் பின்வரும் நிகழ்வுகள் இடம் பெற்றன.

A- 2022.05.25ஆம் திகதி கிரயம் ரூபா 30,000 பெறுமதியான (2022.03.31இல் இருந்த) இருப்புக்கள் திருடப்படடுள்ளன.

B- 2022.03.31ம் திகதி காணப்பட்ட கடன்பட்டோரில் ரூபா 50000 பெறுமதியான கடன்பட்டோர் முறிவடைந்தார் என அறிவிக்கப்பட்டது.

C- 2022.03.31 அன்று காணப்பட்ட வணிக முதலீடு 20 வீதத்தால் குறைந்துள்ளது என 2022.07.02 இல் கண்டறியப்பட்டுள்ளது.

D- 2022.02.28 அன்று ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக அழிவடைந்த இருப்புக்களின் பெறுமதி ரூ 65,000 என 2022.07.02 இல் இனங்காணப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்டுள்ள நிகழ்வுகளுள் பொருந்தாத நிகழ்வுகளாக அமைவது

1. A யும் B யும் மாத்திரம்
2. A ,B, C மாத்திரம்
3. A ,B, C, D மாத்திரம்
4. A யும் C யும் மாத்திரம்
5. A யும் D யும் மாத்திரம்

20) 31.03.2022 அன்று முடிவடைந்த வருடத்திற்கான வருமான கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தரவாத செலவு ரூபா 120 000 ஆகும். 2021.04.01இன் படி உத்தரவாத மீதி ரூபா 150000 ஆகும் உத்தரவாதத்திற்காக ஒரு வருடத்தில் ஏற்பட்ட புணரமைப்பு செலவு ரூபா 20,000 எனில் 31.03.2022 அன்று நிதிநிலைமை கூற்றில் காட்டப்பட வேண்டிய உத்தரவாத தொகை எவ்வளவு?

1. ரூ 270 000
2. ரூ 50 000
3. ரூ 250 000
4. ரூ 290 000
5. ரூ 10 000

(…….)

21) வரையறுக்கப்பட்ட சசி வணிகத்தின் 2022. மார்ச் மாத சம்பளப்பட்டியல் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

ஊழியரின் மொத்த சம்பளத்தில் 10 வீதத்தை ஊழியரும் 15 வீதத்தை தொழில் வழங்குநரும் ஊழியர் சேமலாப நிதியத்திற்காக பங்களிப்பு செய்ய வேண்டும்.

- ஊழியர் மொத்த சம்பளத்தின் படி ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்பு 5 வீதமாகும்.
- மாதாந்த நலன்புரி ரூபா 49 500 சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்டுள்ளது.
- தேறிய சம்பளம் ரூ 382 500 ஆகும். சம்பளம் உட்பட அனைத்து கழிப்பனவுகளும் அடுத்த மாதம் 10ஆம் திகதி செலுத்தப்படும்.

2022 மார்ச் மாதத்திற்கான ஊழியர் தொடர்பான மொத்தச் செலவு மற்றும் மொத்த பொறுப்புக்கள்

| | **ஊழியர் தொடர்பான மொத்தச் செலவு (ரூ)** | **மொத்த பொறுப்புக்கள் (ரூ)** |
|---|---|---|
| (1). | 576 000 | 576 000 |
| (2). | 576 000 | 526 500 |
| (3). | 552 000 | 127 500 |
| (4). | 510 000 | 510 000 |
| (5). | 480 000 | 127 500 |

(……..)

- வரையறுத்த பலங்கா கம்பனியின் அண்மைய இரு ஆண்டுகளுக்கான கணக்கீட்டு தரவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அத்தரவுகளைப் பயன்படுத்தி 22 மற்றும் 23 வினாக்களுக்கு விடையளிகக் வும்.

| | 31-03-2022 திகதியில் (ரூ. 000) | 31-03-2021 திகதியில் (ரூ. 000) |
|---|---|---|
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் | 50 000 | 45 000 |
| பொது ஒதுக்கம் | 5 000 | 2 000 |
| நிறுத்தி வைத்த வருவாய் | 9 500 | 7 000 |

- ■ 31-03-2022 அன்று முடிவடைந்த ஆண்டில் ரூ.500 000 இடைக்கால பங்குகிலாபமாக வழங்கப்பட்டது.
- ■ ஆண்டு காலத்தினுள் பங்கொன்றுக்கு ரூ. 50 படி 80 000 பங்குகள் பொதுவழங்கல் செய்யப்பட்டுள்ளன
- ■ வருடத்தினுள் நிறுத்தி வைத்த வருவாய் பொது ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

22) மொத்த முற்றுமடக்கிய வருமானம் மற்றும் வருடத்திற்கான இலாபமாக அமைவது

| | மொத்த முற்றுமடக்கிய வருமானம் (ரூ000) | வருடத்திற்கான இலாபம் (ரூ000) |
|---|---|---|
| (1). | 5 500 | 2 500 |
| (2). | 6 500 | 4 000 |
| (3). | 7 000 | 3 500 |
| (4). | 5 500 | 3 500 |
| (5). | 7 000 | 4 000 |

(……..)

23) மொத்த உரிமையாண்மை மற்றும் கூறப்பட்ட மூலதனத்தின் தேறிய விளைவுகள்

| | மொத்த உரிமை (ரூ) | கூறப்பட்ட மூலதன அதிகரிப்பு (ரூ) |
|---|---|---|
| (1). | 8 000 | 4 000 |
| (2). | 10 500 | 5 000 |
| (3). | 2 000 | 1 000 |
| (4). | 4 000 | 1 000 |
| (5). | 10 500 | 4 000 |

(……)

24) தினுலி நிறுவனத்தின் 31.03.2022 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நட்டம் ரூ.550,000 ஆகும். மேலதிக தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அலுவலக உபகரணங்களின் மீள்மதிப்பு நட்டம் 150,000 ரூபாய்

நிலம் மீள்மதிப்பு இலாபம் 500 000 ரூ

இருப்பு தள்ளுபடி ரூ.15,000

மோட்டார் வாகன விற்பனையின் இலாபம் ரூ.20,000

காசு தவிர்ந்த நடைமுறை சொத்தின் தேறிய அதிகரிப்பு ரூ.450 000 ஆகும்

நடைமுறை பொறுப்பின் தேறிய அதிகரிப்பு ரூ 235 000 ஆகும்.

- காலப்பகுதிக்கான வட்டிச் செலவு ரூ 15 000 ஆகும்.காசாக செலுத்திய தொகை ரூ 10 000 ஆகும்
- தினுலி நிறுவனத்தின் சாசுப்பாய்சற் கூற்றில் அடையாளம் காணப்பட்ட நடவடிக்கையால் உருவான தேறிய காசானது.

1. ரூ 640 000
2. ரூ 615 000
3. ரூ 630 000
4. ரூ 1 130 000
5. ரூ 1 140 000 (……)

25) 31.03.2021 காலப்பகுதியில் இலாபத்தை கணிப்பிடும் போது பின்வரும் வழுக்கல் ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

- ஆண்டிற்கான வட்டி ரூபாய் 20000 மேலதிகமாக கணக்கிடப்பட்டுள்ளது.
- EPF பங்களிப்பு ரூபா 10000 முற்றிலும் கணக்குகளில் பதியப்படவில்லை.
- ரூபா 2000 வருமானவரி கூடுதலாக செலுத்தப்பட்டுள்ளது.

மேற்குறித்த வழுக்களை திருத்திய பின் வருடத்திற்கான இலாபம் மற்றும் வட்டி காப்பு விகிதம் ஆகியவற்றில் ஏற்படும் தாக்கம்

| | **இலாபம்** | **வட்டிக் காப்பு விகிதம்** |
|---|---|---|
| 1. | அதிகரிக்கும் | குறையும் |
| 2. | அதிகரிக்கும் | மாறாது |
| 3. | மாறாது | குறையும் |
| 4. | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 5. | குறையும் | குறையும் |

(……)

26) பொருளாதார கட்டளை கணியம் (EOQ) தொடர்பான கருதுகோள் அல்லாதது.

1. வருடாந்த மொத்த நுகர்வு தொடர்பாக நிச்சயமாக அறிந்து கொள்ளமுடியும்
2. கட்டளை இடப்பட்ட தொகை ஒரே தடவையில் கிடைக்கப் பெறாது
3. இருப்பு வைத்தல் கிரயத்தை துள்ளியமாக அறிந்துகொள்ள முடியும்.
4. இழிவு இருப்பு மட்டம் பூச்சியமாகும்.
5. அலகொன்றின் இருப்புக்கான விலையை உறுதிப்படுத்திக்கொளள் முடியும். (……)

27) செயலில் உள்ள நேரத்தை கண்டறிய பயன்படுத்தப்படும் மூல ஆவணங்கள்

1 கையொப்ப ஆவணம், வீணான நேரஅட்டை, வேலைச்சீட்டு, நேரப்பதிவு அட்டை

2 விரல் அடையாள இயந்திரம், வேலைகிரய அட்டை, வேலைநேர அட்டை, வீணானநேர அட்டை

3 வேலை நேர அட்டை, வேலைச்சீட்டு ,வேலைக்கிரய அட்டை , வீணான நேர அட்டை

4 விசேட (Barcode) உடனான அட்டை,விரல் அடையாள இயந்திரம்,கையொப்ப ஆவணம், நேரப்பதிவு அட்டை

5 நேரப்பதிவு அட்டை, வேலைநேர அட்டை, வேலைச்சீட்டு, வீணான நேரஅட்டை (…….)

28. இருப்பு மதிப்பீட்டுக்கான கிரயவகையின் அடிப்படை மற்றும் அதற்குரிய சரியான வகைப்படுத்தல்

| | அடிப்படை | கிரய வகை |
|---|---|---|
| 1 | நடத்தை | முதன்மை கிரயம் மற்றும் மேந்தலை கிரயம் |
| 2 | இயல்பு | நிலையான மற்றும் மாறும்கிரயம் |
| 3 | நடத்தை | நிலையான மற்றும் மாறும்கிரயம் |
| 4 | கட்டுப்பாடு | கடடுப்படுத்தக்கூடிய மற்றும் கட்டுப்படுத்தமுடியா கிரயம் |
| 5 | இயல்பு | நேர் மற்றும் நேரில் |

(…………)

29. ஜெயாநாத் நிறுவனம் குறித்த ஒரு பொருளை உற்பத்தி செய்து விற்பனை செய்கிறது. அந்நிறுவனம் தொடர்பில் பின்வரும் தகவல்கள் வழங்கப்படடுள்ளன.

அலகுக்கான மாறும் செலவு- ரூ.225

இலாப அளவு விகிதம் 25%

மொத்த பங்களிப்பு ரூ.75,000

நடைமுறை விற்பனை வருமானம் ரூ 420 000

மொத்த விற்பனை அலகுகளின் எண்ணிக்கை மற்றும் பாதுகாப்பு எல்லை பெறுமதி,

| மொத்த அலகுகளின் எண்ணிக்கை அலகுகள் | பாதுகாப்பு எல்லை பெறுமதி ரூபா |
|---|---|
| (1). 1000 | 300 000 |
| (2). 1400 | 420 000 |
| (3). 1000 | 420 000 |
| (4). 1400 | 120 000 |
| (5). 1000 | 120000 |

(………..)

30. பின்வரும் கூற்றுக்களில் மூலதன முதலீட்டு தீர்மானம் தொடர்பான சரியான கூற்று / கூற்றுக்கள்

A- கணக்கீட்டு திரும்பல் விகிதம் (ARR) மதிப்பிடும் போது, மொத்த வருமானம் மற்றும் மொத்த செலவு கருத்திற் கொள்ளப்படும்.

B- மீளப்பெறும் காலம் (PBP) முறையில் செயல் திட்டத்தின் மொத்த காசு பெறுவனவு மற்றும் மொத்த காசு கொடுப்பனவு மேற்கொளள் ப்படும்.

C- தேறிய நிகழ்கால பெறுமதி முறையில் மொத்த காசுப்பாய்ச்சல் மீது கவனம் செலுத்தப்படும்.

D- மூலதன முதலீட்டு தீர்மான நுடப்முறைகளுள் தேறிய நிகழ்கால பெறுமதி முறையானது சிறந்த நுடப் முறையாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது

1) A,B மற்றும் D மட்டும்

2) A,B மற்றும் C மட்டும்

3) A மற்றும் C மட்டும்

4) A மற்றும் D மட்டும்

5) மேற்குறித்த யாவும் (……)

31) வியாபாரம் ஒன்றின் கணக்கீடு தொடர்பில் பின்வரும் கூற்றுக்கள் சரியானவையா அல்லது பிழையானவையா என்பதனை அடைப்பிற்குள் குறிப்பிடுக

1. எண்ணக்கரு ரீதியான சட்டகத்தின்படி நிதி அறிக்கைகள் வரலாற்று கிரய அடிப்படையில் மற்றும் மாற்று மதிப்பு அடிப்படையில் மாத்திரம் தயாரிக்கப்படுகின்றது (......)
2. நிதிக்கூற்றுக்களை வெளித்தரப்பினர் மாத்திரம் பயன்படுத்துவர் (......)
3. நிதிக் கூற்றுக்களின் தொகுப்பொன்றாக பரீட்சை மீதியை குறிப்பிட முடியும் (......)
4. நிதி அளவீட்டு எண்ணக்கரு எல்லையினை கடப்பதற்கான ஒரு புதிய போக்காக மனித வள கணக்கியல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (......)

32) 2022-03-31 அன்று வணிகத்தின் கொடுக்கல் வாங்கல்களை சீராககதியதன் பின்னரான கணக்கியல் சமன்பாடு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| சொத்துக்கள் | = | மூலதனம் | + | நிறுத்திவைத்த வருவாய் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|---|
| (ரூ 000) | | (ரூ 000) | | ( ரூ 000) | | (ரூ 000) |
| 1500 | = | 1000 | + | 300 | + | 200 |

மேலுள்ள சமன்பாட்டை கணக்கிடும் போது பின்வரும் வழுக்கள் ஏற்பட்டுள்ளன.

- இவ்வாண்டில் கடன்கொடுனருக்கு செலுத்த வேண்டிய ரூ 30 000 10% கழிவு நீங்கலாக உரிமையாளரால் செலுத்தப்பட்டது. இது தொடர்பான பதிவுகள் இடம்பெறவில்லை.
- 15% Vat உள்ளடங்களாக விற்பனை விலை ரூபா 23 000 கொண்ட கடன் விற்பனை VATனை கவனத்தில் கொள்ளாது கணக்கிலிடப்பட்டுள்ளது.
- மேற்குறித்த வழுக்களை திருத்திய பின் பின்வருவனவற்றின் பெறுமதி

1) பொறுப்புக்கள் ரூ ......
2) மூலதனம் ரூ ......
3) நிறுத்தி வைத்த வருவாய் ரூ ......

33) வியாபாரமொன்றின் கொடுக்கல் வாங்கல்களை பதிவதற்கு பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கருவை குறிப்பிடுக

1. ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களை கொள்விலையில் புத்தகத்தில் பதிதல்

   ..............................................................................................................

2. விற்பனை கிரயம் கணக்கிடும் போது இறுதி இருப்பை கழித்தல்

   ..............................................................................................................

3. உத்தரவாத ஏற்பாடுகளை நிதி நிலமை கூற்றில் நடைமுறை பொறுப்பாக வெளிப்படுத்துதல்

   ..............................................................................................................

4. நிறுத்தி வைத்த வருவாயை உரிமையில் ஒரு பகுதியாக இனங்காணல்

   ..............................................................................................................

34. 2022.03.31 இறுதி மாதத்திற்கான பரீட்சை மீதியிலிருந்து எடுக்கப்பட்ட தகவல்கள் வருமாறு

| | |
|---|---|
| விற்பனை | ரூ.345 000 |
| கொள்வனவு | 172 500 |
| செலுத்திய VAT | 12500 |

31.3.2022 அன்று VAT கட்டுப்பாட்டு கணக்கு ரூபாய் 15,000 (வரவு)

**மேலதிக தகவல்கள்**

- சகல கொள்வனவுகளும் விற்பனைகளும் VAT உள்ளடக்கியதாகும்
- மாதத்தில் திருப்பியனுப்பியவை ரூ14,000 (VAT கணக்கிடல் வேண்டும்).

1. 31.03.2022 அன்று இனம் காணப்பட வேண்டிய VAT பெறுமதி எவ்வளவு?.................................
2. 31.03.2022 அன்று நிதிநிலைமை கூற்றில் அது இனம் காணப்பட வேண்டியது சொத்தாகவா? அல்லது பொறுப்பாகவா?.................................................

35. 31.03.2022 அன்று முடிவடையும் வருடத்திற்கான உற்பத்தி நிறுவனம் ஒன்றுடன் தொடர்பான கீழ்வரும் தகவல்கள˙ தரப்பட்டுள்ளன.

| | ரூ 000 |
|---|---|
| ☐ நேர்கூலி | 150 |
| ☐ ஆரம்ப மூலப்பொருள் இருப்பு | 250 |
| ☐ மூலப் பொருள் கொள்வனவு | 1500 |
| ☐ உள் வந்த கூலி | 70 |
| ☐ நிலையான மேந்தலை கிரயம் | 500 |
| ☐ மாறும் மேந்தலை கிரயம் | 300 |

**மேலதிக தகவல்கள்**

- ஒரு அலகை உற்பத்தி செய்ய இரண்டு மணித்தியாலங்கள் தேவைப்படுகின்றன. நேரடி உழைப்பிற்கு மணித்தியாலத்திற்கு ரூ 100 செலுத்தப்படும்.
- 31.03.2022 அன்று மூலப்பொருள் பெறுமதி ரூ. 180000
- வருடத்தில் திருடப்பட்ட் மூலப்பொருள் ரூ. 20000
- உற்பத்தி செய்யப்பட்ட மொத்த அலகுகளின் எண்ணிக்கை 1000
- மொத்த மேந்தலையில் 20 வீதம் நிர்வாகத்திற்குரியது.

1. 2022.03.31 முடிவடையும் வருடத்தின் உற்பத்தி கிரயம் எவ்வளவு? …………………………
2. ஓர் அலகிற்கான முதன்மை கிரயம் எவ்வளவு?..............................................................
3. ஒரு அலகிற்கான மாறும் செலவு எவ்வளவு? ……………………………………

36. 31.03.2022 முடிவடையும் வருடத்திற்கான கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன

- கடன் விற்பனை ?
- கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசு ரூபா 170000
- கொடுத்த கழிவு 15 %
- வருடத்தில் கடன்பட்டோரில் ஏற்பட்ட தேறிய குறைவு ரூபா 20000

1) கொடுத்த கழிவை கணிப்பிடுக …………………….
2) வருடத்திற்கான விற்பனையை கணிப்பிடுக. ………………………….

37) சிரம சுரகும் லங்கா இலாபநோக்கற்ற நிறுவனத்தின் 2021.04.01 இல் காணப்பட்ட பினவரும் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன

| | | |
|---|---|---|
| திரண்ட நிதி | ரூ . 500 000 | |
| ஆயுள் அங்கத்தவர்களின் அங்கத்துவ கடட்ணம் | ரூ . 240 000 | (2020.04.01திகதில் ஆரம்பிக்கப்பட்டது) |
| தொழிலாளர் பயிற்சி மைய கட்டிடநிதி | ரூ . 120 000 | (2020.04.01திகதில் ஆரம்பிக்கப்பட்டது) |

**மேலதிகத் தகவல்கள்**

- காலப்பகுதிக்கான பிற வருமானங்கள் ரூ. 120000 ஆவதோடு காலப்பகுதிக்கான மூலதன செயற்பாட்டு செலவு ரூ 80 000 ஆகும்
- அங்கத்தவரக் ளின் அங்கத்துவக் கட்டணம் பத்து வருடங்களுக்கு வருமானமாக இனங்காணப்படும்
- தொழிலாளர் பயிற்சி மையங்கள் 2022.03.01 அன்று முழுமையாக நிறைவுசெய்யப்பட்டன.

**வேண்டப்படுவது.**

- 2022.03.31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான மிகை அல்லது குறையை கணக்கிடவும். ....................................................
- 2022.03.31 இல் மொத்த உரிமையாண்மையை கணிப்பிடவும். ....................................................

38) அனுர, பவந்த மற்றும் காதர் ஆகியோர் 2:2:1 எனும் இலாபப் பகிர்வு அடிப்படையில் நிறுவனத்தை நடத்தி வந்தனர். அனுர 2021.04.01 பங்குடமையிலிருந்து ஓய்வு பெற்றார். அது தொடர்பான பின்வரும் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன. ஏனைய பங்காளர்கள் சமனாக இலாபத்தினைப் பகிர்ந்து வணிகத்தை தொடர்ந்து நடத்திச் செல்ல தீர்மானித்தனர்.

1. 2021.04.01 மூலதன கணக்கு மீதிகள்
   - அனுர 200 000
   - பவந்த 500 000
   - காதர் 300 000
2. 2021.04.01 நடைமுறை கணக்கு மீதிகள்
   - அனுர 20 000
   - பவந்த (10 000)
   - காதர் (5000)
3. அனுரவின் உரிமையானது 10 % வட்டிக்கு உட்பட்டு கடன் கணக்கிற்கு மாற்றப்பட்டது.

2022.03.31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கடன் வட்டி ரூ 32 000 ஆகும்

A- அனுர ஓய்வு பெற்ற தினத்தில் மதிப்பிடப்பட்ட வணிகத்தின் நன்மதிப்பு யாது? ....................................................

B- 31.03.2022 அன்று காதரின் மூலதன கணக்கு மீதி யாது? ....................................................

C- 31.03.2022 அன்று பவந்தவின் மூலதன கணக்கு மீதி யாது? ....................................................

39) வரையறுத்த மிளிந்து கம்பனி பின்வரும் நிபந்தனைகளின் கீழ் 5 இயந்திரங்களை வரையறுத்த பாலா கம்பனிக்கு விற்பனை செய்ய 2022.01.01 முனமொழிவுகளை சமர்ப்பித்துள்ளது.

☐ இயந்திரத்தின் விற்பனை விலை ரூ 250 000

☐ இயந்திரங்களை பொருத்துதல் ரூ. 50 000

☐ 2 வருட சேவைக் காலம் ரூ. 100 000 (பொருத்தப்பட்ட தினத்திலிருந்து சேவைக்காலம் ஆரம்பமாகும்.)

இயந்திரங்களை பொருத்துதல் வணிக நிறுவனத்தால் செய்யப்பட வேண்டியதோடு , 02 வருட சேவை காலத்தைப் பெறுவது கட்டாயமில்லை. அனைத்து தேவைகளையும் ஒரே நேரத்தில் பூர்த்தி செய்வதாயின் 20% வியாபார கழிவு வழங்கப்படும். 2022-01-01 அனைத்துத் தேவைகளுக்குமான முனமொழிவுகள் கையொப்பமிடப்பட்டன. 2022-02-01- 05 இயந்திரங்கள் வழங்கப்பட்டு அதற்குரிய பெறுமதி ரூ.1280 000 பணமாக பெறப்பட்டது. 2022-03-31க்குள் 03 இயந்திரங்கள் பொருத்தி முடிக்கப்பட்டன. 2022.03.31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான

1. இனங்காணப்பட வேண்டிய மொத்த வரி வருமானம் ....................................................
2. அத்தினத்தில் இனங்காணப்பட வேண்டிய ஈட்டப்படாத வரி வருமானத்தைக் கணிப்பிடுக.

....................................................

40) வரையறுக்கப்பட்ட பிரபாத் பொது நிறுவனம் ரூ 350 000 பெறுமதியுடைய இயந்திரம் ஒன்றை 2021.04 01ஆம் திகதி குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்தது. இதன் குத்தகை காலம் 4 வருடங்கள் ஆகும். வருடாந்த குத்தகை தவணை பணம் ரூ 150000 ஆவதோடு, முதலாம் வருட தவணைப் பணம் 31.03.2020 அன்று செலுத்தப்பட்டுள்ளது. குத்தகை உடன்படிக்கைக்குள் நுழையும்போதே நேரடி செலவினமாக ரூ.50 000 செலுத்தப்பட்டுள்ளது. இது இன்றுவரை கணக்கில் பதியப்படவில்லை.

2022/2023 மற்றும் அடுத்த இரண்டு வருடங்களுக்கான குத்தகை வட்டி முறையே ரூ 60 000 மற்றும் ரூ. 70 000 ஆகும்.

1) குத்தகை கடன் கொடுத்தோரின் நடைமுறை பொறுப்பு மற்றும் நடைமுறைஅல்லா பொறுப்பு எவ்வளவு?

---------------------------------------------------------------------------------------------------

2) இவ்வாறு குத்தகை கடனாளியின் நடைமுறை மற்றும் நடைமுறை அல்லா பொறுப்பு என அடையாளம் காண அடிப்படையாக அமையும் கணக்கீட்டு எண்ணக்கரு யாது? ----------------------------------------

41) வரையறுக்கப்பட்ட தசுன் நிறுவனத்தின் 31-03-2021 அன்று நிதி நிலமை கூற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தரவுகள் வருமாறு .

| | ரூ.000 |
|---|---|
| சாதாரண பங்கு மூலதனம் (100 000 பங்குகள்) | 4 500 |
| பொதுஒதுக்கம் | 2 000 |

2021.10.01 இல் நிறுவனத்தின் ஒவ்வொரு 5 சாதாரண பங்குகளுக்கு ஒரு பங்கு என்றவாறு, பங்கு ஒன்று ரூ. 60 விலையில் உரிமை வழங்கல் செய்யப்பட்டுள்ளது. இதற்காக அனைத்து பங்குதாரர்களும் இவ்வுரிமையைப் பெற்றதோடு 2021.10.01 அன்று காணப்பட்ட பங்குகளில் ¼ பங்குகள் ரூபா 50 விலையில் வெகுமதியாக வழங்கப்படட் து.

2022.03.31 தினத்தில் நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கையில் காட்டப்படும் சாதாரண பங்கு மூலதனம் மற்றும் ஒதுக்க மீதியை தருக. ................................... .....................................

42) வரையறுத்த ரூவான் பொது கம்பனியின் ரூ 400 000 பெறுமதியான ஆதனப்பொறி உபகரணங்கள் 2021 04.01ஆம் திகதி 50000 மிகையோடு முதல் தடவையாக மீள் மதிப்பு செய்யப்பட்டுள்ளது. நிறுவனத்தின் ஆதனப்பொறி உபகரணங்கள் வருடாந்தம் 10 வீத நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்விடப்படுகின்றது. இது மீள்மதிப்பு தொகை ஏடுகளில் பதியப்படின் காலத்திற்கான இலாபம் மற்றும் மொத்த முற்றும் அடக்கிய வருமானத்தில் ஏற்படுகின்ற தேறிய விளைவு யாது? ----------------------------------------

43) வருடகாலத்தினுள் ஆதனப்பொறி உபகரணம் மீதான தேறிய அதிகரிப்பு ரூ.150000 ஆவதோடு வருடாந்த தேய்மானம் ரூ 30,000 ஆகும். ரூ 120 000 கிரயம் கொண்டதும் ரூ 20,000 திரண்ட தேய்மானம் கொண்டதுமான இயந்திரம் ஒன்று ரூ 25,000 இலாபம் வைத்து விற்கப்பட்டுள்ளது. (உடன் காசு அடிப்படையில் கொள்வனவு விற்பனை இடம் பெற்றுள்ளது)

1 வருடத்தினுள் கொள்வனவு செய்த ஆதன பொறி உபகரணங்களின் கிரயம் யாது? ------------------------

2 சொத்து விற்பனையால் கிடைத்த காசு எவ்வளவு? ----------------------------------------

44) 2022 03.31. இல் கவிந்து வணிகத்தின் மீதமுள்ள இருப்புக்கள் ரூ.20 000 ஆவதோடு, பின்வரும் விகிதங்கள் கணக்கிடப்பட்ட பின்னர் ரூ.5000 கடன்பட்டோர் தீர்ப்பனவொன்று கணக்கில் இடப்படவில்லை என்பது தெரியவந்தது.

☐ நடைமுறை விகிதம் 3:1

☐ விரைவு விகிதம் 2:1


1 2022.03.31இல் திருத்தப்படுவதற்கு முன் இருந்த நடைமுறைச் சொத்து எவ்வளவு?

2 மேற்கூறிய கொடுக்கல்,வாங்கல்கள் திருத்தப்பட்ட பின் கணக்கிடப்பட்ட பின்வரும் விகிதங்களுக்கு யாது நிகழுமென குறிப்பிடுக. (குறையும் / அதிகரிக்கும் / மாற்றமில்லை)

i நடைமுறை விகிதம் ......................

ii விரைவு விகிதம் ...........................

45)




1 150 அலகுகளின் மொத்த பங்களிப்பு யாது? ----------------------------------------------------------------

2 220 அலகுகளை விற்பனை செய்ய எதிர்பார்க்குமாயின் எதிர்பார்க்கப்படும் இலாபம் யாது?

----------------------------------------------------------------

46) உற்பத்தி பொருள் கொள்வனவு செய்யும் வியாபாரி ஒருவருக்கு யு என்னும் பொருளுக்கான வருடாந்த கேள்வி 300 000 ஆகும். ஒரு கட்டளைக்கு ரூ 60 செலவாகுவதோடு அலகொன்றை வைத்திருப்பதற்கான கிரயம் இருப்புக் கிரயத்தின் 10% ஆகும். ஒரு அலகிற்கான கிரயம் ரூ 40 ஆகும்.

1. பொருளாதாரக் கட்டளை கணியம் எவ்வளவு? ----------------------------------------------------------------
2. கட்டளைகளின் எண்ணிக்கை யாது? ----------------------------------------------------------------

47) வெதுப்பக தொழிலில் ஈடுபட்டுள்ள மா பிசைபவர் ஒருவருக்கு ஒரு மணித்தியாலத்திற்கு ரூ.300 செலுத்தப்படுவதோடு, ஒவ்வொரு மேலதிக மணித்தியாலத்திற்கும் ரூ. 400 செலுத்தப்படுகிறது. வாரத்திற்கு ஐந்து நாட்கள் வேலை செய்தல் வேண்டும். சாதாரண வேலை நேரம் 8 மணித்தியாலம் ஆகும். 2022 ஜனவரி முதல் மா பிசைபவர் வாரத்தில் 50 மணி நேரம் வேலை செய்துள்ளார்.
பின்வருவனவற்றை கணிக்குக.

1. ஜனவரி மாதம் முதல் வாரத்தில் மா பிசைபவரின் மொத்த சம்பளம் ……………………..
2. மா பிசைபவரின் சம்பளத்தில் உள்ளடங்கியுள்ள நேர்கூலிக் செலவு ……………………

48) குறித்தவொரு நிறுவனத்தின் உற்பத்தி பொருள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | அலகொன்றிற்கான கிரயம் (ரூ.) |
|---|---|
| மொத்த கிரயம் | 400 |
| நேர் கிரயம் | 90 |
| உற்பத்தியல்லாத பொது மேந்தலை செலவு | 150 |

அனைத்து நேர்ச் செலவுகளும் மாறும் செலவுகளாகும். மேலும் உற்பத்தி பொது மேந்தலை செலவுகளில் 30% மற்றும் உற்பத்தியல்லாத பொது மேந்தலைச் செலவுகளில் 10 % என்பன மாறும் செலவுகளாகும்.

1. அலகொன்றிற்கான உற்பத்திச் செலவு ரூ. ………….
2. அலகொன்றுக்கான மொத்த மாறும் செலவு ரூ …………

49) சமூக அமைப்பொன்று கொவிட் விழிப்புணர்வு நிகழ்ச்சியொன்றை ஏற்பாடு செய்துள்ளது. அதற்காக லயன்ஸ் கழகம் அனுசரனை வழங்குவதாக ஒப்புக்கொண்டுள்ளது. இந்நிகழ்வில் பங்குபற்றும் ஒருவருக்காக ரூ.3000 செலவினை இச்சமூக அமைப்பானது ஏற்வேண்டியுள்ளதோடு பங்குபற்றும் ஒருவருக்காக லயன்ஸ் கழகம் ரூ 4000 இனை சமூக அமைப்பிற்கு செலுத்த ஒப்புக்கொண்டுள்ளது. பாதிடப்படட் செலவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

- ☐ விரிவுரையாளர் கட்டணம் - 25000.00
- ☐ மண்டபம் - 60 000.00
- ☐ விழிப்புணர்விற்கான துண்டு பிரசுரம் - 10 000.00
- ☐ விரிவுரையாளருக்கான உபசரிப்பு செலவு - 5000.00

**பின்வருவனவற்றை கணிக்குக.**

1. இதில் பங்குபற்றும் ஒருவருக்கான பங்களிப்பு யாது? ....................................
2. விழிப்புணர்வு நிகழ்வின் நிலையான செலவு யாது? .......................................
3. மொத்த செலவை ஈடுசெய்ய பங்கு கொள்ள வேண்டிய நபர்களின் எண்ணிக்கை யாது? ..................

50) நிறுவனமொன்று செயற்றிட்டமொன்றை ஆரம்பிகக் தீர்மானித்துள்ளது. அதற்காக காணப்படும் பல்வேறு மாற்று வழிகள், அவற்றின் தேறிய நிகழ்கால பெறுமதிகள் மற்றும் மீளப்பெறும் காலம் என்பன வருமாறு

| செயற்றிட்டம் | தேறிய நிகழ்கால பெறுமதி | மீளப்பெறும் காலம் |
|---|---|---|
| K | 200 000 | 3 வருடம் 8 மாதம் |
| L | 178 000 | 3 வருடம் 6 மாதம் |
| M | (25 000) | 4 வருடம் 2 மாதம் |
| N | 0 | 5 வருடம் |

1 நிறுவனமானது அதன் தற்போதைய தேறிய பெறுமதியின் அடிப்படையில் எச்செயற்றிட்டத்தை தேர்ந்தெடுக்க வேண்டும்? காரணம் தருக.

----------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------

2 மீளப்பெறும் காலமுறையின் அடிப்படையில் எந்த செயற்றிட்டத்தை தேர்ந்தெடுக்க வேண்டும்?

----------------------------------------------------------------------------------------------------

க. பொ.த உயர் தரம்

# கணக்கியல் 11

Channel NIE

கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சைக்கான முன்னோடி வினாப்பத்திரம்-2022

கணக்கியல் பகுதி-11 நேரம்:- இரண்டு மணித்தியாலம்

பரீட்சை சுட்டெண்: ......................

அறிவுறுத்தல்

- முதலாம் வினா , இரண்டாம் வினா உட்பட 5 வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்கவும்.
- அனைத்து வினாக்களுக்குமான விடைகளை புதிய தாளில் ஆரம்பிக்கவும்.
- இவ்வினாப்பத்திரத்திற்கு 200 புள்ளிகள் வழங்கப்படும்.

1) 31.3.2022 அன்று லக்னாக பொது நிறுவனத்தின் பரீட்சை மீதி வருமாறு (ரூ. 000)

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| ஆதனம் பொறி உபகரணம் | 13000 | |
| குத்தகை செலவு | 1000 | |
| வியாபார வருமதி / வியாபார சென்மதி | 4500 | 3200 |
| செலுத்திய வட்டி | 200 | |
| கொள்வனவு | 3500 | |
| நன்கொடை | 300 | |
| செலுத்திய வரி | 900 | |
| நிர்வாக செலவு | 3000 | |
| விநியோக செலவு | 1200 | |
| செலுத்திய பங்கிலாபம் | 700 | |
| 10% முதலீடு | 5000 | |
| திறைசேரி உண்டியல் 2021.04.01 பெறப்பட்டது | 2000 | |
| இருப்பு | 920 | |
| காசு | 454 | |
| கொடுத்த கழிவு / பெற்ற கழிவு | 830 | 134 |
| விற்பனை | | 19620 |
| உத்தரவாத ஏற்பாடு (2021.04.01 அன்று) | | 400 |
| நிலத்தின் மீள்மதிப்பு மீதான ஒதுக்கம் | | 800 |
| ஆதனம்,பொறி,உபகரணம் மீதான திரண்டதேய்வு (2021.04.01) | | 2800 |
| நட்ட ஒதுக்கீடு (ஏற்பாடு) (2021.04.01) | | 250 |
| 12% வங்கிக் கடன் | | 2000 |
| 2021.04.01 வருமான வரிக்கான ஏற்பாடு | | 400 |
| விற்பனை முற்பணம் | | 400 |
| முதலீட்டு வருமானம் | | 200 |
| கூறப்பட்ட சாதாரண பங்குமூலதனம் | | 5700 |
| நிறுத்திவைத்த வருவாய் | | 1600 |
| | 37504 | 37504 |

**மேலதிக தகவல்கள்**

1. 31.03.2022 அன்று இருப்புக்களின் கிரயம் ரூ. 500 000 ஆகும்.அவற்றின் தேறிய, தேறத்தக்க பெறுமதி ரூ. 550 000 என மதிப்பிடப்பட்டுள்ளது. 15.05.2022 இயக்குனர்கள் நிதிக்கூற்றுக்கான அங்கீகாரம் அளிக்க முன்னர் அவை ரூபா 80000 விற்பனை செலவில் ரூ. 560 000 ற்கு விற்கப்பட்டது.

2. பரீட்சை மீதியில் தரப்பட்டுள்ள நிர்வாக செலவுகள் பின்வரும் உருப்படிகளை கொண்டுள்ளது.
(ரூ. .000)

- ☐ கணக்காய்வு கட்டணம் 250
- ☐ குத்தனை 800
- ☐ உத்தரவாத பழுதுபார்த்தல் செலவு 100
- ☐ விளம்பர செலவு 120

3. 2021.10.01 அன்று ரூ.60 000 கிரயம் கொண்ட கணனி ரூ. 20 000 இலாபம் வைத்து விற்கப்பட்டது. விற்பனை மூலம் பெறப்பட்ட காசு கணனி கணக்கில் செலவு வைக்கப்பட்டதை தவிர வேறு எந்த பதிவுகளும் இடம் பெறவில்லை இந்த சொத்து 2019.10.01 அன்று வாங்கப்பட்டது.

4. நடைமுறை ஆண்டிற்கான விற்பனையில் ரூபா 320 000 உத்தரவாத ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். நடைமுறை வருடத்தில் உத்தரவாத செலவாக பழுது பார்த்தலுக்காக செலுத்தப்பட்ட ரூபா 100 000 ஆனது நிர்வாக செலவில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

5. பின்வரும் தகவல்கள் வணிகத்தின் ஆதனம்,பொறி மற்றும் உபகரணம் தொடர்பானது(ரூ.000)

| விபரம் | கிரயம் / பெறுமதி | 01.04.2021ன் படி திரண்ட தேய்வு | தேய்வு சதவீதம் |
|---|---|---|---|
| நிலம் | 5000 | - | |
| கட்டிடம் | 4000 | 1200 | 5 % |
| கணனி | 3000 | 1400 | 20 % |
| இயந்திரம் | 1000 | 200 | 10 % |
| | 13000 | 2800 | |

2021.10.01 அன்று கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 200 000 கிரயம் கொண்ட இயந்திரமும் மேலே உள்ள இயந்திர கிரயத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

6. வருட இறுதியில் நிலமானது ரூ 4000 000 ற்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 2022.03.31 அன்று வியாபாரத்தில் காணப்பட்ட கட்டிடமானது ரூ 2800 000 ற்கு முதல் தடவையாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. இது தொடர்பாக ஏடுகளில் எப்பதிவுகளும் இடம்பெறவில்லை.

7. 2021.04.01 இல் விநியோக நோக்கத்திற்காக மோட்டார் வாகனமொன்று குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டது. அது தொடர்பான தகவல்கள் வருமாறு (ரூ .000)

| | |
|---|---|
| குத்தகை கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதி - | 2500 |
| ஆரம்ப கொடுப்பனவு | 800 |
| பயன்தரு ஆயுட்காலம் | 7 |
| எச்ச பெறுமதி காணப்படவில்லை | |

வருடாந்த குத்தகை தவணை கட்டணம் ரூ 800 000 ஆவதோடு குத்தகை கடன் காலம் 5 வருடங்களாகும். முதலாம் வருட மற்றும் இரண்டாம் வருடத்திற்கான குத்தகை வட்டியானது முறையே ரூ 500 000 மற்றும் ரூ 400 000 ஆகும். ஆரம்ப கொடுப்பனவு மற்றும் பதிவு கட்டணம் என்பன குத்தகை செலவாக பரீட்சை மீதியில் காட்டப்பட்டுள்ளன. வேறு எப்பதிவுகளும் இடம்பெறவில்லை. இவ்வருடத்திற்கான குத்தகை தவணை கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

8. 2022.02.28 அன்று சலுகை ஒப்பந்த அடிப்படையிலான பொருள் விற்பனைக்கான ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

- பொருள் விற்பனை பெறுமதி ரூ. 600 000
- வருடத்திற்கான சேவை வழங்கல் ரூ. 200 000

2022.03.31 திகதியில் ஆலோசனை அங்கீகரிக்கப்பட்டு அத்தினத்தில் மேற்குறிப்பிட்ட பண்ட விற்பனையில் 50% வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தின்படி சேவைக்காலம் வழங்கப்பட்ட நாள் முதல் ஒருவருடமாகும். பொருள் விற்பனையின் போது பெறப்பட்ட ரூ 400 000 விற்பனை முற்பணமாக காட்டப்பட்டுள்ளது.

9. வருட இறுதியில் உள்ளவாறான கடன் பட்டோரில் ரூ 200 000 மீதியுடைய கடன்பட்டோர் முறிந்தவராக 2022.05.02 அன்று நீதிமன்றத்தால் பிரகடனப்படுத்தப்பட்டார். இக்கடன்படுனருள் ரூ.50 000 இனை விசேட ஏற்பாடும், எஞ்சிய கடன்படுனரில் 10% இனை பொதுமுறை ஏற்பாடும் செய்ய தீர்மானித்துள்ளனர்.

10. வருடத்திற்கான வருமான வரியானது வரிக்கு முந்திய இலாபத்தில் 20% ஆகும். பரீட்சை மீதியில் காட்டப்பட்டுள்ள செலுத்திய வரியானது முன்னைய வருடத்திற்காக செலுத்திய ரூபா 450 000 இனையும் உள்ளடக்கியுள்ளது.

11. வருட இறுதியில் இயக்குனர் சபையானது பின்வரும் முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளது.
    - நிறுத்திவைத்த வருவாயினை பயன்படுத்தி ரூ 500 000 பொது ஒதுக்கமொன்றை உருவாக்க தீர்மானித்துள்ளனர்.
    - கம்பனியானது நிறுத்திவைத்த வருவாய்களிலிருந்து ரூ.300 000இனை மூலதனமாக்கியுள்ளனர்.
    - சாதாரண பங்குதாரர்களுக்கு பங்கொன்றிற்கு ரூ 10 வீதம் இறுதிபங்கிலாபமாக வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது**

LKAS 01 (நிதிக் கூற்றுகளை சமர்ப்பித்தல்) தரப்படுத்தலுக்கமைய பிரசித்தப்படுத்தலுக்கான வரையறுத்த லக்னகா பொதுக் கம்பனியின் பின்வரும் நிதிக்கூற்றுக்கள் (குறிப்புகள் உட்பட)

- 31.03 2022 இல் முடிவடைந்த வருடத்திற்கான லாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்று
- 31.08 2022 இல் முடிவடைந்த வருடத்திற்கான உரிமை மாற்றுக் கூற்று
- 31.08.2022 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று (40 புள்ளிகள்)

2)

அ) வரையறுத்த சன்ரே பொது கம்பனியானது AB என்ற பண்டத்தை உற்பத்தி செய்வதற்கு X எனும் மூலப்பொருளை பயன்படுத்துகின்றது. AB எனும் பண்டத்தின் வாராந்த உற்பத்தியானது 200 இலிருந்து 400 அலகுகள் வரை மேற்கொள்ளப்படுகின்றது. இதில் ஒரு அலகை உற்பத்தி செய்வதற்கு 10 கிலோகிராம் X மூலப்பொருள் தேவைப்படுகின்றது.

| | |
|---|---|
| விநியோக காலம் | குறைந்தது 4 |
| வாரம் | கூடியது 6 |
| உச்ச இருப்பு மட்டம் | 30 000 அலகுகள் |

**வேண்டப்படுவது.**

1 மூலப் பொருள் X ற்கான மறுகட்டளை மட்டம்
2 மூலப் பொருள் X ற்கான மறுகட்டளை தொகை
3 மூலப் பொருள் X ற்கான சராசரி இருப்பின் அளவை கணிக்கவும்.

(10 புள்ளிகள்)

ஆ) விண்டி வணிகத்தின் 2022 சனவரி மாத ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் தொடர்பான தரவுகள் வருமாறு

| | | |
|---|---|---|
| ☐ நிர்வாக அதிகாரி | - ஒஹாசி | 170 000 |
| ☐ அபிவிருத்தி அதிகாரி | - நிசினி | 127 000 |
| ☐ உதவி முகாமையாளர் | - கிறுலி | 85 000 |

**மேலதிக தகவல்கள்**

1. மேலே சனவரி மாதத்தில் செலுத்தப்பட்ட சம்பளமானது ஊழியர் சேமலாப நிதிக்காக EPF பங்களிப்பு 10 % உம் ஊழியர் காப்பீட்டு தவணைப் பணத்திற்கான 5% பங்களிப்பு கழித்த பின்னரான பங்களிப்பாகும்.
2. விண்டி வணிகமானது ஊழியரின் மொத்த சம்பளத்தில் ஊழியர் சேமலாப நிதிக்காக 15% தினையும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்காக 3% தினையும் பங்களிப்பு செய்கின்றது.
3. ஒவ்வொரு மாதத்திற்குமான EPF, ETF, மற்றும் காப்புறுதி பங்களிப்பு தொகை அடுத்த மாதம் 15 ம் திகதி செலுத்தப்படுகின்றது. 2021 டிசம்பர் 31இல் செலுத்த வேண்டிய EPF கணக்கில் ரூ 112 500 உம் ETF கணக்கில் ரூ 10 000 உம் ஊழியர் காப்புறுதி தவணை கணக்கில் ரூ 22 500உம் அட்டுறுவாக இருந்தது. இவை சனவரி மாதம் 15ஆம் திகதி காசாக செலுத்தப்பட்டது.

**வேண்டப்படுவது**

1 2022 சனவரி மாதத்திற்கான சம்பளப் பட்டியல்
2 சம்பளக் கட்டுப்பாட்டுக் கணக்கு செலுத்தவேண்டிய EPF கணக்கு, செலுத்த வேண்டிய ETF கணக்கு மற்றும் செலுத்த வேண்டிய காப்புறுதி கணக்கு

( 10 புள்ளிகள்)

இ. வரையறுத்த பவன் உற்பத்தி நிறுவனமானது குடைகள் மற்றும் பெண்களுக்கான கைப்பைகளை உற்பத்தி செய்கின்றது. இதற்காக இரண்டு உற்பத்தி பகுதிகளையும் ஒரு சேவைப் பகுதியையும் (சிற்றுண்டிச்சாலை) கொண்டுள்ளது. இரண்டு உற்பத்தி பகுதிகளும் ஒரே கட்டிடத்தில் அமைந்துள்ளன.(கட்டிடம் 1) சேவை பகுதியானது வேறொரு கட்டிடத்தில் காணப்படுகிறது. (கட்டிடம் 2) சேவைப் பகுதியில் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதில்லை.
மதிப்பிடப்பட்ட மேந்தலை செலவுகள் வருமாறு ரூ 000

| | |
|---|---|
| ☐ மின்சார செலவுகள் வெளிச்சம் | 2000 |
| ☐ மின்சார செலவு (இயந்திரம் இயக்குதல) | 600 |
| ☐ இயந்திர தேய்வு | 300 |
| ☐ உணவக செலவுகள் (உணவு) | 250 |
| ☐ கட்டிட வாடகை (கட்டிடம் 1) | 240 |
| ☐ (கட்டிடம் 2) | 100 |
| ☐ ஊழியர் சம்பளம் | 400 |
| ☐ உற்பத்தி முகாமையாளர் சம்பளம் | 500 |
| ☐ உணவக முகாமையாளர் சம்பளம் | 300 |

மேலதிக தகவல்கள்

| விபரம் | உற்பத்தி 1 | உற்பத்தி 2 | சேவை |
|---|---|---|---|
| இயந்திரக் கிரயம் | 2000 | 1000 | - |
| ஊழியர் எண்ணிக்கை | 30 | 10 | 10 |
| தளப்பரப்பு | 5000 | 3000 | 2000 |
| உற்பத்தி முகாமையாளர் எண்ணிக்கை | 3 | 2 | - |

- சேவைத்துறைக்குரிய மேந்தலை செலவுகளானது உற்பத்தி பிரிவுகளிடையே சமமாக பகிரப்படுகின்றது.
- உற்பத்தி துறைக்குரிய மேந்தலைகள் இயந்திர மணித்தியாலங்களின் அடிப்படையில் உறிஞ்சப்படுகின்றது. உற்பத்தி 1,உற்பத்தி 2 திணைக்களங்களுக்குரிய மதிப்பிடப்பட்ட இயந்திர மணி-நேரம் முறையே 10000 மற்றும் 5000 ஆகும்.
- மதிப்பிடப்பட்ட அலகொன்றிற்கான செலவுகள்

| | குடை | பெண்கள் கைப்பை |
|---|---|---|
| மூலக்கிரயம் ரூ | 800 | 2000 |
| இயந்திர மணித்தியாலம் உற்பத்தி 1 | 2 | 3 |
| இயந்திர மணித்தியாலம் உற்பத்தி 2 | 1 | 2 |
| விற்பனை இலாபம் | 25% | 20% |

**வேண்டப்படுவது**

1 பகிர்வு அடிப்படையை தெளிவாக காட்டக்கூடியதான மேந்தலை பகுப்பாயவ் அட்டவணை
2 பொருத்தமான அடிப்படையை பயன்படுத்தி சேவைத்துறையின் பொது மேந்தலை செலவுகளை மீள்பகிர்வு செய்க.
3 ஒவ்வொரு உற்பத்தி பிரிவுக்குமான மேந்தலை உறிஞ்சல் வீதம்.
4 விற்பனை விலையில் 25 % இலாபம் வைத்து விற்கப்படுமாயின் குடையொன்றின் விற்பனை விலை.

(20 புள்ளிகள்)

3) செனுரி என்பவர் விவசாய இரசாயனங்களை சந்தைப்படுத்துவதற்கு ‘ஆக்ரோ’ எனும் பெயரில் தனிவியாபாரமொன்றை 01.04.2022 அன்று ஆரம்பித்தார். பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்றவைகளாகும்.

1. வணிக உரிமையாளர் ரூ500 000 பெறுமதியான கட்டிடமொன்றினையும்,300 000 காசையும் வணிகத்தின் பெயரிலான வங்கி நடைமுறை கணக்கில் வைப்பு செய்து வணிகத்தினை ஆரம்பித்தார்.
2. ரூ 200 000 பெறுமதியான உர இருப்புக்கள், பாதி பணமாகவும், மீதி கடனாகவும் வழங்கப்படும் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டது.
3. கிரயத்தில் 20% இலாபம் வைத்து 30 000 கிரயமான இருப்புக்கள் காசிற்கு விற்கப்பட்டது.
4. உரத்தை சேமித்து வைப்பதற்காக ரூ 60 000 பெறுமதியான உபகரணமொன்றை உரிமையாளர் வணிகத்தில் ஈடுபடுத்தினார்.
5. ரூ 50 000 பெறுமதியான சென்மதியாளரை தீர்ப்பனவு செய்வதற்காக ரூ 20 000 பெறுமதியான இருப்புகள் திருப்பியனுப்பப்பட்டதுடன் மிகுதி தொகையினை உரிமையாளர் தனது சொந்த பணத்திலிருந்து செலுத்தியுள்ளார்.
6. காலாவதியானதால் ரூ 20 000 கிரயமான இருப்புக்கள் வழங்குனருக்கு திருப்பியனுப்பப்பட்டுள்ளது
7. ரூ 25 000 கிரயமான இருப்புகள் ரூ 30 000 ற்கு கடனுக்கு விற்கப்பட்டுள்ளதுடன், கட்டளைக்குப் பொருந்தாத காரணத்தினால் அதில் ரூபா 5000 கிரயமான பண்டங்கள் கடன்பட்டோரால் திருப்பியனுப்பப்பட்டது.
8. வணிக கட்டிடத்திற்கான மாதாந்த மின்கட்டணம் ரூ 5000 செலுத்த வேண்டியுள்ளது. கட்டிடத்திற்கான மாதாந்த தேய்வு ரூ 2000 ஆகும்.
9. உரிமையாளர் தனது வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கைக்காக எடுத்துச் சென்ற உரத்தின் பெறுமதி ரூ 6000 ஆகும்.
10. வழங்குனருக்கு செலுத்தவேண்டிய தொகையில் 10% கழிவு பெறப்பட்டது

30.04.2022 அன்று வணிகத்தின் வியாபார வருமதிகள் கணக்கீட்டில் பின்வரும் தகவல்கள் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

- வங்கி அறிக்கையின் படி ரூ 5000 நேரடி வைப்பாக பெறப்பட்டுள்ளது
- வாடிக்கையாளர் ஒருவரின் ரூ 3000 அறவிடமுடியாகடனாக இனங்காணப்பட்டது.

**வேண்டப்படுவது**

1) 01 தொடக்கம் 10 வரையான கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீட்டு சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கங்களை அவற்றின் பெறுமதியில் குறிப்பிட்டு இவ்வொவ்வொறு பெறுமதியினதும் முன்பாக அதிகரிப்பு எனின் (+) எனவும் குறைவு எனின˙ (-) எனவும் குறித்துக் காட்டுக.(பின்வரும் மாதிரியைப் பயன்படுத்துக.)

| இல | ஆதன பொறிகள் மற்றும் உபகரணம் | சரக்கிருப்பு | வியாபார வருமதிகள் | காசு | வியாபார கொடுமதிகள் | ஏனைய கொடுமதிகள் | மூலதனம் | நிறுத்தி வைத்த வருவாய் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| | | | | | | | | |

2. 2022 ஏப்ரல் மாதத்திற்கான மீளாய்வின் பின்னரான வியாபார வருமதிகள் மீதியை கணிப்பிடுக.
3. 2020 ஏப்ரல் மாதத்திற்கான தேறிய சொத்துக்களின் அடிப்படையில் இலாபம் / நட்டத்தினைக் கணிப்பிடுக. (40 புள்ளிகள்)

4)

அ. களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள வரையறுத்த அவிது (தனியார்) நிறுவனம் முட்டை விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. இந்நிறுவனம் பெறுமதிசேர் வரிக்காக VAT பதிவு செய்துள்ளதுடன் 2022.01.01 இல் பின்வரும் தரவுகள் பேரேடுகளிலிருந்து பெறப்பட்டுள்ளது.

| | ரூபா (000) |
|---|---|
| ☐ காசு | 400 |
| ☐ கடன் பட்டோர் | 200 |
| ☐ கடன்கொடுத்தோர் | 300 |
| ☐ VAT கட்டுப்பாட்டுக் கணக்கு (செலவு) | 50 |

20.01.2022 அன்று மேற்படி வருமதியாளர் நிலுவைத் தொகையைத் தீர்ப்பதற்காக பணம் பெறப்பட்டது. 2022.01.31 இல் இந்நிறுவனம் மேலே கடன் கொடுத்தோர் மற்றும் VAT நிலுவைகளை கொடுத்து தீர்த்துள்ளது. பின்வரும் தரவுகள் 2022 சனவரி மாதத்துடன் தொடர்புடையன.

**விற்பனை மற்றும் வியாபார வருமதியாளர்கள்**

நிறுவனம் மொத்த வியாபாரிகளுக்கு 30 நாட்கள் கடன் காலத்துடன் முட்டைகளை விற்பனை செய்கின்றது. முழுத்தொகையையும் 15 நாட்களுக்குள் தீர்ப்பனவு செய்யுமாயின் VAT தவிர்ந்த விற்பனையில் 10% கழிவு வழங்கப்படும்.

2022.01.31இல் இறுதி மாதத்திற்கான விற்பனை கையேட்டிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் வருமாறு

| | விற்பனை (ரூ 000) | VAT 8% (ரூ 000) |
|---|---|---|
| • அமில | 800 | 64 |
| • பண்டார | 600 | 48 |
| • கிருசான் | 400 | 32 |
| | 1800 | 144 |

அமில முழு கடன் தொகையையும், பண்டார கடன் தொகையில் அரைவாசியையும் 15 நாட்களுக்குள் செலுத்தியதுடன் கிறுசான் ரூ. 200 000தினை மாத்திரம் நிர்ணயித்த கடன் காலத்தினுள் செலுத்தியுள்ளார்.

இந்நிறுவனமானது தனது விற்பனை நிலையங்கள் மூலம் சில்லறை வியாபாரிகளுக்கு உடன் காசுக்கு விற்பனை செய்வதோடு, மாதத்திற்கான உடன் காசு விற்பனைகள் 8% VAT உட்பட 216 000 ஆகும்.

**கொள்வனவு மற்றும் வியாபார சென்மதிகள்**

இந்நிறுவனம் Fernando and sons இடம் இருந்து கடன் அடிப்படையில் முட்டைகளை கொள்வனவு செய்வதோடு ஏனைய வழங்குனர்களிடமிருந்து உடன் காசுக்கு முட்டைகளை கொள்வனவு செய்கின்றது. Fernando and sons இடமிருந்து கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட முட்டைகளின் பெறுமதி VAT நீங்கலாக ரூபா 500 000 ஆகும்.

Fernando and sons நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய ரூ 400 000 மீதியை தீர்க்கும் பொருட்டு 10% கழிவு பெறப்படுகின்றது. ஏனைய வழங்குனர்களுடன் மேற்கொண்ட உடன் காசுக் கொள்வனவு ரூ 300 000 ஆகும்.இக்கொள்வனவின் போது VAT உள்ளடங்குவதில்லை.

**செலவுகள் மற்றும் ஏனைய வருமானம்**

இம்மாதம் செலுத்தப்பட்ட செயற்பாட்டு செலவுகள் ரூபாய் 150 000 ஆகும். முட்டை இருப்புக்களை கொண்டு செல்லும் போக்குவரத்து செலவிற்காக ரூபா 50 000 முட்டை மொத்த வியாபாரிகளிடமிருந்து பெறப்பட்டது

**செயற்பாட்டு செலவுகள் மற்றும் ஏனைய வருமானங்களுக்கு VAT பொருந்தாது**

**வேண்டப்படுவது**

1 செலவு மற்றும் கொடுப்பனவு பேரேடு
2 பின்வரும் பேரேட்டு கணக்குகள்

- காசு கட்டுப்பாட்டுக் கணக்கு
- கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு
- கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு
- VAT கட்டுப்பாட்டுக் கணக்கு

(20 புள்ளிகள்)

ஆ.

கசுனி மற்றும் லுதாரா நடத்தி சென்ற பங்குடமை வியாபாரத்தின் விதிமுறைகள் பின்வருமாறு

- இலாப நட்டங்களை சமமாக பகிர்தல்
- ஒவ்வொரு பங்காளருக்கும் மாதாந்தம் ரூபா 15000 சம்பளமாக வழங்குதல்.
- மூலதனத்திற்கு 10 வீத ஆண்டு வட்டி பெற உரித்துடையவர்கள்.

- பங்காளர்களால் பங்குடமைக்கு வழங்கப்படும் கடனுக்காகவும், பங்குடமை வணிகத்தால் பங்காளருக்கு வழங்கப்பட்ட கடனுக்காகவும் 8% வட்டி செலுத்தப்பட வேண்டும்.
- நன்மதிப்பு தொடர்பான சகல சீராக்கங்களும் பங்காளர் மூலதன கணக்கினூடாக மேற்கொள்ளப்படுகின்றது

2022 .03.31ஆம் திகதி கசுனி மற்றும் லுதாரா பங்குடமையின் திருத்திய நிதி நிலமைக் கூற்று பின்வருமாறு

| | ரூ 000 | ரூ 000 |
|---|---|---|
| சொத்து உபகரணம் | 3500 | |
| விற்பனை | | 4000 |
| விற்பனை செலவு | 2000 | |
| செயற்பாட்டு செலவு | 800 | |
| ஊழியர் கடன் 8 % செனுதி | | 1000 |
| மூலதன கணக்கு கசுனி | | 1200 |
| லுதாரா | | 1500 |
| நடைமுறை கணக்கு கசுனி | 200 | |
| லுதாரா | | 300 |
| கசுனிக்கு வழங்கிய கடன் | 800 | |
| காசு | 200 | |
| பற்று கசுனி | 200 | |
| லுதாரா | 300 | |
| | 8000 | 8000 |

மேலதிக தகவல்கள்

1. வியாபார கட்டிடத்தின் ஒரு பகுதியில் லுதாரா வசிப்பதுடன் அதற்காக மாதாந்தம் ரூபா 20 000இனை வாடகையாக செலுத்த வேண்டும். இது தொடர்பான எப்பதிவுகளும் கணக்குகளில் இடம்பெறவில்லை.
2. கசுனி மற்றும் செனுதி ஆகியோரின் கடன்களுக்கான வட்டி சீராக்கம் பதியப்படவில்லை.
3. வியாபாரத்தின் மின் கட்டணம் ரூபாய் 3 லட்சம் கசுனி தனது சொந்த பணத்திலிருந்து செலுத்தியுள்ளார். இது கசுனிக்கு மீளக்கொடுக்கப்படவில்லை என்பதோடு, இது தொடர்பான பதிவுகளும் கணக்குகளில் இடம்பெறவில்லை.
4. லுதாரா வணிகத்திலிருந்து பற்று செய்த ரூ.100 000 பண்டங்கள் தொடர்பில் கணக்குகளில் எப்பதிவும் இடம்பெறவில்லை.
5. தொழிலில் ஊழியராக பணிபுரிந்த செனுதி 2022.03.31 ஆம் திகதியில் புதிய பங்காளராக சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன் அவர் வியாபாரத்திற்கு கொடுத்த கடனானது மூலதனத்திற்கு மாற்றப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவரது நன்மதிப்பு பங்காக ரூ.200 000 காசு கொண்டுவர அவர் இணங்கியுள்ளார்
6. புதிய பங்குடமையின் இலாப நட்ட விகிதம் கசுனி லுதாரா மற்றும் செனுதிக்கு இடையே 5:3:2 என பங்கிடப்படும்.

வேண்டப்படுவது.

1. 2022.03.31 இல் முடிந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று
2. 2022.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பங்காளர் மூலதனம் மற்றும் நடைமுறைக்கணக்கு

( 20 புள்ளிகள்)

5)

அ வரையறுத்த சீதாங்கி பொதுக் கம்பனியின் 2022.03.31 திகதியில் மற்றும் 2021.03.31 திகதியில் உள்ளவாறான சுருக்கிய நிதி நிலமை கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | 2022.3.31 | 2021.03.31 |
|---|---|---|
| | (ரூ 000) | (ரூ 000) |
| ஆதனம் பொறி மற்றும் உபகரண கொண்டு செல்லல் மீதி | 35000 | 33000 |
| நிலையான வைபப்பு | 5000 | |
| இருப்பு | 8200 | 6500 |
| வியாபார வருமதிகள் | 9500 | 12400 |
| முற்பண செலவு | 1400 | 1200 |

| | | |
|---|---|---|
| கிடைக்கவேண்டிய நிலையான வைப்பு வட்டி | 300 | |
| காசும் காசுக்கு சமமானவைகளும் | 2400 | 1800 |
| மொத்த சொத்துக்கள் | 61800 | 54900 |
| | | |
| கூறப்பட்ட சாதாரண மூலதன பங்குகள் | 30000 | 25000 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | 5000 | 3000 |
| நிறுத்திவைத்த வருவாய்கள் | 5300 | 2400 |
| வங்கிக்கடன் | 13000 | 14000 |
| வியாபார கொடுமதிகள் | 5900 | 8100 |
| அட்டுறு வட்டி | 1200 | 800 |
| வருமான வரிக்கான ஏற்பாடு | 1400 | 1600 |
| மொத்த உரிமையாண்மையும் பொறுப்புகளும் | 61800 | 54900 |
| | | |

**மேலதிக தகவல்கள்**

1. எல்லா விற்பனைகளும், கொள்வனவுகளும் கடன் அடிப்படையில் இடம்பெறும்.
2. இவ்வருடத்தில் ஆதனம் ,பொறி மற்றும் உபகரணம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனத்தின் கிரயம் ரூபா 1200 000 ஆகும்.
3. வருடத்தில் ரூபாய் 3 லட்சம் கிரயம் கொண்ட அலுவலக உபகரணங்கள் ரூ 20 000 இலாபத்துடன் விற்கப்பட்டுள்ளது. விற்கப்படும் போது அதன் திரண்ட தேய்வு ரூபா 30 000 ஆகும்.
4. இவ்வருடத்தில் வங்கி கடனொன்று பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் செலுத்திய வங்கி தவணைக் கட்டணமானது ரூபா 1700 000 ஆகும். இதில் உள்ளடங்கியுள்ள வட்டி ரூபாய் 200 000 ஆகும்.
5. 2021.07.01அன்று 10 வீத வட்டியுடனான நிலையான வைப்பு ஒன்று ஆரம்பிக்கப்பட்டது
6. செலுத்திய வரி ரூபா 1500 000 ஆகும்.

**வேண்டப்படுவது**

காசுப்பாய்ச்சல் கூற்றுக்கமைய 31.03.2022 இல் முடிவடைந்த வருடத்திற்கான வரையறுத்த சீதாங்கி பொது கம்பனியின் காசுப்பாய்ச்சல் கூற்று (செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பாயச்சலை கணிப்பதற்கு நேரில் முறையை பயன்படுத்துக.)

(20 புள்ளிகள்)

ஆ.

31.03.2020 இன் படி ரன்முது விளையாட்டு கழகத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 150 ஆகும்

31.03.2021 இல் முடிவடைந்த வருடத்திற்கான காசு பெறுவனவு, கொடுப்பனவு கணக்கு மற்றும் சொத்துக்கள், பொறுப்புகள் தொடர்பான விபரம் வருமாறு.

கொள்ளல் கொடுத்தல் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீ.வ | 150 000 | விளையாட்டு மைதான வாடகை | 80000 |
| சந்தா கட்டணம் | 200 000 | விளையாட்டு உபகரணம் | 30000 |
| நன்கொடை | 10 000 | ஏனைய செலவுகள் | 40000 |
| பழைய பொருள் விற்பனை | 15 000 | நிலையான வைப்பு | 100000 |
| | | மீ.செ | 125000 |
| | 375000 | | 375000 |
| மீ.வ | 125000 | | |

31.03.2020 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

| | |
|---|---|
| காணி கட்டிடம் (கிரயம்) | 500 000 |
| விளையாட்டு உபகரணம் | 200 000 |
| கிடைக்க வேண்டிய சந்தா கட்டணம் | 10 000 |
| முற்பணமாக பெற்ற சந்தா கட்டணம் | 5000 |

| | |
|---|---|
| கையிலுள்ள காசு | 125 000 |
| செலுத்த வேண்டிய மைதான வாடகை | 12 000 |
| முற்பணமாக செலுத்திய ஏனைய செலவுகள் | 7000 |

**பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன**

1 வருடத்திற்கான கட்டிடத்தேய்வு ரூபாய் 8000 ஆகும்.

2 31.03.2021 அன்று முற்பணமாக கிடைத்ததும் கிடைக்க வேண்டியதுமான சந்தா கட்டணம் முறையே ரூ.20000 மற்றும் ரூ.40000 ஆகும்

3 31.03.2021 அன்று செலுத்தவேண்டிய விளையாட்டு மைதான வாடகை ரூ. 5000 ஆவதோடு முற்பணமாக செலுத்திய ஏனைய செலவு ரூ.4000 ஆகும்.

4 விளையாட்டு உபகரணம் வருடாந்தம் 5 வீத தேய்விடப்படுகிறது.

**வேண்டப்படுவது**

1 31.03.2021 இல் முடிவடையும் வருடத்துக்கான சந்தா கணக்கு

2 31.03.2021 இல் முடிவடையும் வருடத்திற்கான வருமானக் கூற்று

(20 புள்ளிகள்)

6)

அ. பிரபுத்தா பொது நிறுவனத்தின் 31.03.2022 இல் முடிவடையும் வருடத்திற்கான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன

| | |
|---|---|
| ☐ விற்பனை (கடன் அடிப்படையில்) | 4500 000 |
| ☐ தேறிய இலாப வீதம் | 30மூ |
| ☐ ஆரம்ப இருப்பு | 20 000 |
| ☐ வருடத்தில் இருப்பில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு | 140 000 |
| ☐ ஏனைய வருமானம் | 550 000 |
| ☐ மொத்த விற்பனை வருமானத்தில் 20% செயற்பாட்டுச் செலவாகும் (வட்டி தவிர) | |
| ☐ வருடத்திற்கான வரி | 30 000. |
| ☐ நீண்ட கால கடன் 10% வங்கி கடன் | 1000 000 |
| • வேலை செய்த நாட்களின் எண்ணிக்கை | 240 |
| • காலத்தின் கடன் விற்பனையில் 20% பொது வரவுகள் என அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | |

வேண்டப்படுவது பின்வரும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் முடிவெடுப்பதற்கு பொருத்தமான விகிதத்தை கணிப்பிடுக.

1 இருப்புக்களைப் பயன்படுத்துவதில் செயல்திறனை கண்டறிதல்

2 கடன் பட்டோர் சேகரிப்பு காலம்

3 கடன்களுக்கு வட்டி செலுத்தும் திறன் ( 10 புள்ளிகள்)

ஆ) வரையறுக்கப்பட்ட சதில் நிறுவனமானது அந்நிறுவனத்தின் உற்பத்தி திறனை மேம்படுத்துவதற்காக புதிய இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்ய திட்டமிட்டுள்ளது.

**இது தொடர்பான தகவல்கள் வருமாறு**

**i** புதிய இயந்திரத்தை வாங்கினால் பழைய இயந்திரத்தை ரூ.500 000ற்கு விற்பனை செய்யலாம்

**ii** புதிய இயந்திரம் தொடர்பான தகவல்கள்

| | |
|---|---|
| ☐ கிரயம் | 3800 000 |
| ☐ பயன்தரு ஆயுட்காலம் | 5 வருடம் |
| ☐ எச்ச பெறுமதி | 800 000 |

**iii** முதலாம் மற்றும் இரண்டாம் வருடத்திற்கான வருடாந்த பராமரிப்பு செலவு தலா ரூ. 500 000 ஆவதோடு மூன்றாம் வருடத்தில் இருந்து அது ரூ.100 000 ஆகும்.

**iv** தேய்மானம் உட்பட வருடாந்த நிலையான செலவு ரூபா 750 000 ஆகும்.

V புதிய இயந்திரத்தை கொள்வனவு செய்வதால் வருடாந்தம் ரூபா 950 000 ஊழியர் கிரயம் சேமிக்கப்படுகிறது.

**vi** 12% எதிர்பார்க்கை இலாப விகித மீதான கழிவு

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| 0.89 | 0.79 | 0.71 | 0.64 | 0.57 |

**வேண்டப்படுவது**

மேலே செயற்றிட்டம் தொடர்பாக

**i** ஒவ்வொரு வருடத்திற்குமான காசு உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல்

**ii** முதலீடு திரும்ப பெறும் காலம்

**iii** நிகழ்கால பெறுமதி மற்றும் பரிந்துரைப்பு

(10 புள்ளிகள்)

இ. வரையறுத்த மெத்சாதி கம்பனியானது பாடசாலை எழுதுபொருள் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் நிறுவனமொன்றாகும்.தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருட்களின் விலை உயர்வு மற்றும் வீட்டுச் செலவு உயர்வு பற்றிய வழிப்புணர்வு மற்றும் அதற்கான தீர்வு நடவடிக்கைகள் தொடர்பான 5 மணிநேர செயலமர்வொன்றினை நிறுவனத்தின் நலன்புரிசங்கம் ஏற்பாடு செய்துள்ளது. இந்நிறுவனத்தின் உள் ஊழியர்கள் மற்றும் வெளிநபர்களும் பங்கேற்கலாம்.செயலமர்வில் பங்கேற்பவர்களிடமிருந்து ரூ 2000 கட்டணமாக அறவிடப்படும்.

இது தொடர்பாக பின்வரும் செலவுகள் மதிப்பிடப்பட்டுள்ளன.

- விரிவுரையாளர் ஒருவருக்கு ஒரு மணி நேரத்திற்கு ரூபா 2500 (விரிவுரையாளர்கள் இருவர் )
- அறிவுறுத்தல்கள் அடங்கிய துண்டு பிரசுரங்களை அச்சிடுவதற்கான செலவு (ஒரு துண்டு பிரசுரத்திற்கு) ரூபா 200
- ஒரு மணி நேரத்திற்கு மண்டப வாடகை ரூ.4000
- ஒலிபெருக்கி வாடகை ரூ 14,000
- ஒரு நபருக்கான உபசரிப்பு செலவு ரூ. 500
- இந்த செலவுகளை ஈடு செய்வதற்காக நிறுவனத்தின் நலன்புரி சங்கம் ரூ. 20000 இனை வழங்குகின்றது.
- அதிகபட்சமாக 100 பேருக்கு மட்டுமே மண்டப வசதியினை வழங்கமுடியும்

**வேண்டப்படுவது**

1. மொத்த செலவை ஈடு செய்வதற்காக செயலமர்வில் பங்குபற்ற வேண்டிய நபர்களின் எண்ணிக்கை எவ்வளவு?
2. 65 பேர் பங்குபற்றுவார்களாயின் இலாபம் எவ்வளவு?
3. பங்குபற்றும் 65 நபர்களில் 26 பேர் உள் ஊழியர்கள் எனின் அவர்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படாவிடின் இலாபம் எவ்வளவு ?
4. அறவிடப்படும் ரூபா 2 000 யினை குறைக்குமாறு பங்கேற்பாளர்கள் கோரியிருப்பின் மற்றும் 40 நபர்கள் பங்குபற்றுவார்களாயின் மொத்த செலவை ஈடு செய்வதற்கு அறவிடப்பட வேண்டிய கட்டணம் எவ்வளவு?

(20 புள்ளிகள்)